DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-------
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ERANIEL.

| | | |
|---|---|---|
| Calendar | } | CC 322/2013 |
| Miscellaneous | } | |
| Preliminary Register | } | |
| Sessions | } | |

| | | |
|---|---|---|
| | { Prosecution | PW. 1 |
| Deposition of witness for | { Respondent | |
| | { Court | |

Name : தமிழ்செல்வி

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.02.2021

<u>முதல் விசாரணை</u>:

நான் குளச்சலில் வசித்து வருகிறேன். வீட்டு வேலைச் செய்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். சாட்சிகள் ஆன்றனி விஜய், தொம்மை தல்மேதா, லோப்பாஸ், சிந்துஜா ஆகியோர்களைத் தெரியும். 25.12.2009ம் தேதி இரவு 10.00 மணி அளவில் நானும் எனது கணவர், சித்தப்பா, சித்தி ஆகியோர்களுடன் எனது தாய் மாமா வீட்டிற்கு சென்று விட்டு திரும்ப எங்கள் வீட்டிற்கு வந்துக்கொண்டிருந்தோம். அப்போது எதிரி பிரேம்குமார் பத்மனாபா மருத்துவமனை அருகில் வைத்து என்னை இடிப்பது போல் வந்தார். எனது கணவர் சத்தம் போட்டார். அப்போது எனது கணவருக்கும் பிரேம்குமாருக்கும் வாய்தகராறு ஏற்பட்டு இருவருக்கும் இடையே தள்ளுமுல்லு ஏற்பட்டது. அருகிலுள்ளவர்கள் சண்டையை விலக்கி விட்டோம். பின்னர் நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். பின்னர் இரவு 11.30 மணி அளவில் எதிரிகளுடன் 4, 5 பேர்கள் சேர்ந்து எனது வீட்டின் மீது கற்களை கொண்டு தாக்கினார்கள். நாங்கள் கதவை திறந்து வெளியே வந்தபோது எதிரிகள் எனது கணவர் ஆன்றனி விஜய், சித்தப்பா தொம்மை தல்மேதா, மாமா லோப்பாஸ் ஆகியோர்களை தாக்கினார்கள். தட்டிக்கேட்ட எனது தங்கை சிந்துஜாவையும் அடித்தார்கள். சண்டை நடந்துக்கொண்டிருக்கும் போதே நானும் எனது சித்தியும் சேர்ந்து காவல்நிலையத்தில் புகார் அளிக்க வந்துவிட்டோம். எனது கணவரும், மாமாவும் சிகிட்சைக்காக அரசு மருத்துவமனையில் சேர்ந்தார்கள். இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க கோரி

நான் புகார் வாக்குமூலம் அளித்தேன். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-------
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ERANIEL.

Calendar } CC 322/2013
Miscellaneous }
Preliminary Register }
Sessions }

Deposition of witness for { Prosecution PW. 2
{ Respondent
{ Court

Name : சிந்துஜா

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.02.2021

முதல் விசாரணை:

நான் லியோண்நகரில் வசித்து வருகிறேன்.சென்னையில் வேலைச் செய்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். அ.சா1 எனது அக்கா. 25.12.2009ம் தேதி எனது அக்கா, அக்கா கணவர், சித்தி, சித்தப்பா ஆகியோர்கள் எனது தாய் மாமாவைப் பார்க்கச்சென்றார்கள். திரும்பி வரும் போது பத்மனாபா மருத்துவமனை அருகில் வைத்து பிரச்சினை ஏற்பட்டது. அதன் பிறகு அவர்கள் வீட்டிற்கு வந்துவிட்டார்கள். பின்னர் இரவு 11.00 மணி அளிவல் வீட்டு கதவின் மீது கல்லெறியும் சத்தம் கேட்டு நாங்கள் வெளியே சென்று பார்த்தோம். அப்போது எதிரிகள் வெளியே நின்றுக்கொண்டிருந்தார்கள். எதிரிகள் அசிங்கமாக பேசி எனது அக்கா கணவரை தாக்கினார்கள். நான் எதற்கு எனது அக்கா வீட்டுக்காரரை அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரி பரசுராமன் எனது நைட்டியை பிடித்து கழுத்தோடு சுவற்றில் அடித்தார். எனது அம்மா அவரது கையை தட்டிவிட்டு என்னை பிடித்து இழுத்தார்கள். எனது அக்காவும் சித்தியும் இது சம்மந்தமாக புகார் அளிக்க காவல்நிலையம் சென்றார்கள். எனது அக்கா கணவர் மற்றும் சித்தப்பா சிகிட்சைக்காக மருத்துவமனையில் சேர்ந்தார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

இல்லை.